www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணை பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 6th Term Examination - 2022

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் - I<br>Christianity - I | Two Hours<br>Gr. 13 (2022) | 43 | T | I |

### பகுதி I

❖ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. இறை வெளிப்பாட்டின் அம்சங்களில் ஒன்று.
   1) சுய வெளிப்பாடு 2) படைப்பு 3) மீட்பின்வாக்குறுதி
   4) இயற்கைத்திட்டம் 5) விசேட வெளிப்பாடு

02. திருவிவிலியத்தின் பிரதான ஆசிரியர் இறைவன் எனெனில் அதிலிருப்பது.
   1) இறைவனின் கைவன்மை 2) இறைவனின் செயல்கள்
   3) இறைவனின் வெளிப்பாடும் இறை செய்தியும்
   4) இறைவனின் திட்டம் 5) குலமுதுவர்களின் வாழ்க்கை முறை

03. இறைவனால் பெயர் மாற்றம் செய்யப்பட்ட நபர்கள்
   1) ஆபிரகாம், ஈசாக், எசாயா
   2) யாக்கோபு, மோசே, செக்கரியா
   3) ஆபிரகாம், காயீன், மோசே
   4) ஈசாக், எசேக்கியேல், மோசே
   5) ஆபிரகாம், சாராள், யாக்கோபு

04. தாவீது அரசன் அரசியல், சமயரீதியாக முக்கியத்துவம் உள்ள தலைநகராக்கிய நகர் எது?
   1) பெத்தேல் 2) தாண் 3) யூதா 4) ஜெருசலேம் 5) எபிரோன்

05. 19ஆம் நூற்றாண்டு வரை ஐந்நூலின் ஆசிரியராகக் கருதப்பட்டவர்.
   1) ஆபிரகாம் 2) மோசே 3) தூயஜெறோம் 4) தூய பவுல் 5) தூய யோவான்

06. மனிதன் இறைவனுக்கு எதிராகப் பாவம் செய்து தண்டணை பெற்றாலும் இறைவன் அவனை கைவிடுவதில்லை என்பதற்கு உதாரணமாக அமைவது.
   1) ஈசாக்கிற்கு இரக்கம் காட்டுதல்
   2) யோசேப்புக்கு இரக்கம் காட்டுதல்
   3) காயீனுக்கு இரக்கம் காட்டுதல்
   4) மோயீசனுக்கு இரக்கம் காட்டுதல்
   5) ஆபேலுக்கு இரக்கம் காட்டுதல்

07. மிகப் பழமையான சட்டங்களையும் சமய சடங்குகளையும் தன்னகத்தே கொண்டுள்ள மரபு.
   1) யாவே மரபு 2) எலோகிம் மரபு 3) குரு மரபு
   4) இணைச்சட்டமரபு 5) யாவே, குரு மரபு



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

- A. அறிவுரையாக அமைந்திருப்பது.

  B. மோசேயின் போதனைக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

  C. உருவக அமைப்பை கொண்டமை.

  D. உயரிய எபிரேய மொழியைக் கொண்டமை.

  E. நாடக அமைப்பைக் கொண்டமை.

08. மேலே உள்ள கூற்றுக்களில் E மரபுக்குரிய இலக்கிய பண்பு

1) C 2) B, C 3) C,D 4) D, E 5) C, E

09. A, B இலக்கிய பண்பைக் கொண்ட மரபு

1) J மரபு 2) P மரபு 3) E மரபு 4) D மரபு 5) E, D மரபு

10. யாவே மரபுக்குரிய இலக்கிய பண்பாக அமைந்த எழுத்துக்கள்.

1) A, C 2) B, C 3) C,D 4) D,E 5) C,E

11. இவ்வுலகில் இறைவனின் சாயலுக்கும் உருவத்திற்கும் சமமானதாக கருதப்படும் ஒரே படைப்பு.

1) ஆதாம் 2) ஆபிரகாம் 3) மோசே
4) நோவா 5) ஆணும் பெண்ணும் மட்டும்

12. இறைவன் காயீன் மட்டில் வைத்த அடையாளச் சின்னம்.

1) இறை விடுதலை 2) இறை அன்பு 3) இறைமன்னிப்பு
4) இறை பாதுகாப்பு 5) இறை ஆசீர்

13. “தாவீது அரசு என்னும் மரத்தில்அரச தளிர் ஒன்று புறப்படும்” எனக் கூறிய இறைவாக்கினர்,

1) மீக்கா 2) எரேமியா 3) எசாயா 4) எசேக்கியேல் 5) ஆமோஸ்

14. தாயின் கருவில் உருவாகு முன்னரே இறைவாக்கினராக அழைக்கப்பட்டவர்.

1) தாவீது 2) எரேமியா 3) சாமுவேல் 4) எசாயா 5) எசேக்கியேல்

15. இறைவனின் அன்பின் இறைவாக்கினர் என அழைக்கப்பட்டவர்.

1) ஓசேயா 2) ஆமோஸ் 3) மீக்கா 4) செக்கரியா 5) எரேமியா

- A. இவ்வாறு கூறுவது ஆண்டவராகிய நானே

  B. தியானத்தில் ஈடுபடல்

  C. குழுவாகச் செயற்படல்.

  D. ஒரே கடவுள் கொள்கை.

  E. ஆண்டவரின் செய்தி …… உங்களிடம் வந்துள்ளது.

  F. மெசியா பற்றிய சிந்தனை

16. மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களிலிருந்து இறைவாக்கினரின் பிரதான படிப்பினையாக அமைந்தது.

1) D, E 2) A, D 3) E, F 4) D, F 5) C, D



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

17. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினரின் தூதுப் பணியில் காணப்பட்ட விசேட பண்புகள்.
    1) A, C 2) A, D 3) C, F 4) C, D 5) B, C

18. இறைவாக்கினர் இறைவாக்குரைக்கும் போது பயன்படுத்திய சொற்பதங்களாக அமைவன.
    1) A, B 2) B, C 3) A, E 4) D, E 5) E, F

19. ஒரு கடிதத்தின் வடிவில் எழுதுப்பட்ட மிகக் குறுகிய தனிப்பட்ட திருமுகம்.
    1) உரோமையருக்கு எழுதிய திருமுகம் 2) பிலமோனுக்கு எழுதிய திருமுகம்
    3) கொலோசேயருக்கு எழுதிய திருமுகம் 4) பிலிப்பியருக்கு எழுதிய திருமுகம்
    5) எபேசியருக்கு எழுதிய திருமுகம்

20. இயேசு பாவத்தை வெறுத்து பாவிகளை ஏற்றுக் கொண்டு அவர்களை நேர்வழியில் இட்டுச் சென்றமைக்கு உதாரணமாக அமைந்தது.
    1) யேசு சமாரியாப் பெண்ணைச் சந்தித்தமை.
    2) லாசரை உயிர்ப்பித்தமை.
    3) தண்ணீரை இரசமாக்கியமை.
    4) பேய் பிடித்த வரை நலமாக்கியமை.
    5) கை சூம்பிய வரை குணமாக்கியமை.

21. பரிசேயர் யேசுவின் பணி வாழ்வின் போது அவரில் முன்வைத்த முறைப்பாடுகளாக அமைந்தது.
    1) இறையாட்சியின் நியதிச் சட்டங்கள் பற்றியது 2) விருத்தசேதனம் பற்றியது
    3) வாழ்வு தரும் உணவு நானே என்று கூறியது 4) ஓய்வு நாளை மீறுதல் பற்றியது
    5) உலகின் ஒளி நானே என கூறியது

22. பெற்றோருக்குச் சரியான முறையில் கொடுக்க வேண்டிய மதிப்பையும், கவனிப்பையும், அன்பையும் செலுத்தினால் பிள்ளைக்கு என்ன கிடைக்கும்.
    1) நல்ல சொத்து 2) நல்ல மதிப்பு 3) நீடிய ஆயுள் 4) நற்பெயர் 5) நல்ல புகழ்

23. புதிய ஏற்பாட்டில் மீட்பு வரலாற்றை வெளிப்படுத்தும் நூல்
    1) தொடக்கநூல் 2) திருத்தூதர்பணி 3) விடுதலைப்பயணம்
    4) திருமுகம் 5) வெளிப்பாட்டு இலக்கியம்

24. தூய பவுலின் முதலாவது மறைதூதுப் பயணத்தின் போது பயணித்த பயணத் தோழர்கள்.
    1) பர்ணபா, யோவான் மாற்கு 2) லூக்கா, தீத்து 3) தீத்து, சீலா
    4) பர்ணபா, சீலா 5) யோவான் மாற்கு, சீலா

25. பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த ஒருவரை நலம் பெறச் செய்ததால் பவுலுக்கும் பரப்பணபாவுக்கும் தெய்வங்கள் என்ற கௌரவப் பெயர் வழங்கப்பட்ட இடம்.
    1) செசாரியாவில் 2) கொரிந்தில் 3) எபேசில்
    4) இக்கோனியாவில் 5) லிஸ்திராவில்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

26. யேசு மாட்சிமையோடு வரும் போது வலம் மற்றும் இடப்புறம் அமரக் கேட்டுக் கொண்ட திருத்தூதர்கள்.
    1) வலது இடது புறக்கள்வர்கள்
    2) யாக்கோபும், பேதுருவும்
    3) பேதுருவும், யோவானுவும்
    4) யோவானும், வலது பக்கக் கள்வனும்
    5) பெரிய யாக்கோபு மற்றும் யோவான்

27. திவ்விய நற்கருணையை ஏற்படுத்துதல் தொடர்பாகப் புதிய ஏற்பாட்டில் உள்ள அறிக்கைகளுள் மிகப் பழைமையான அறிக்கையாக இருப்பது.
    1) 1 கொரி 11 : 23 – 26
    2) 1 கொரி 13 : 1 – 13
    3) 1 கொரி 1 : 1 - 15
    4) லூக்கா 5 : 11 – 14
    5) யோவா 13 : 1 – 13

28. ஒரே குடும்பமாகவும், ஒரே சமூகமாகவும், கடவுளைப் போற்றியதோடு மற்றவர்களின் தேவைகளுக்காகத் தம்மை அர்ப்பணிப்பதையும் பற்றி குறிப்பிடுவது.
    1) செனத்திரன் சபை
    2) பக்திச் சபையில்
    3) தொழுகைக் கூடங்களில்
    4) ஆரம்பகால கிறிஸ்தவ சபையில்
    5) சங்கங்களில்

29. கிறிஸ்தவர்களுக்கு எதிராகத் துன்புறுத்தல்களை ஆரம்பித்த முதலாவது உரோமைப் பேரரசன்.
    1) பேரரசன் மாற்குஸ் அவுரேலியன்
    2) பேரரசன் நீரோ
    3) பேரரசன் தொமீசியன்
    4) பேரரசன் மக்சிமியன்
    5) பேரரசன் தியோக்கிளிசியன்

30. பேரரசன் தேசியுஸ் பேரரசனின் சிலைகளுக்கு பலி ஒப்புக் கொடுப்பதற்கும் தேவதைகளை வணங்குவதற்கும் கிறிஸ்தவர்களை கட்டாயப்படுத்தி பெற்றுக் கொள்ளச் செய்த சான்றிதழ்,
    1) பிறப்புச் சான்றிதழ்
    2) நற்சான்றிதழ்
    3) லிபெலூஸ் சான்றிதழ்
    4) வதிவிடச் சான்றிதழ்
    5) வரவுச் சான்றிதழ்

31. அன்னை திருச்சபையானது புனித ஜஸ்டினின் திருவிழாவைக் கொண்டாடுவது.
    1) ஆனி 01
    2) ஆவணி 15
    3) மார்கழி 08
    4) தை 01
    5) ஆனி 03

32. மரியாளின் உதரத்திலே மனிதத் தன்மையான கிறிஸ்துவே கருவுற்றிருந்தார். எனவே மரியாளைத் தேவதாய் என அழைக்கக் கூடாது மரியாள் மனித கிறிஸ்தவின் தாய் மட்டுமே என்ற வாதத்திற்குரியவர்கள்.
    1) ஆரியுஸ் வாதத்தினர்
    2) எபேசிய வாத்தினர்
    3) பெலாஜியுஸ் வாதத்தினர்
    4) எஸ் சேனிய வாதத்தினர்
    5) நெஸ்தோரிய வாதத்தினர்

33. இலத்தீன் பண்பாட்டின் இதயமென்றும், கிரேக்க பண்பாட்டின் மத்திய நிலையம் என்றும் அழைக்கப்பட்டது முறையே.
    1) உரோம், எபேசு
    2) எருசலேம், உரோம்
    3) தாண், பெத்தேல்
    4) உரோம், கொன்சாந்துநோபிள்
    5) எபேசு, கொன்சாந்து நோபிள்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

34. முதலாவது சிலுவைப் போருக்கு தலைமை தாங்கியவர் யார்?
    1) திருத்தந்தை 8வது பொனிப்பஸ்
    2) திருத்தந்தை 1ம் பிரான்சிஸ்
    3) திருத்தந்தை இரண்டாவது ஊர்பான்
    4) திருத்தந்தை 23ம் அருளப்பர்
    5) திருத்தந்தை 19ம் பத்தி நாதர்

35. 1536ல் " கிறிஸ்தவ மதக்கோட்பாடுகள்" என்னும் நூலை வெளியிட்டவர்.
    1) மாட்டின் லூத்தர்
    2) ஜோண் கல்வின்
    3) ஜோண் சுவிங்கிள்
    4) பொனிப்பஸ்
    5) 8ம் கென்றி

36. புனித அவிலா திரேசாவினால் எழுதப்பட்ட சிறந்த ஆன்மீக நூல்களாக அமைந்தவை.
    1) இருண்ட இரவு, ஆன்மீகப் பாடல்
    2) கார்மேல் சபை ஏற்றம், இருண்ட இரவு
    3) கிறிஸ்தவ மதக்கோட்பாடுகள், ஆன் மீகப்பாடல்
    4) நிறை வாழ்வின் வழி, உள்ளக மாளிகை
    5) அன்பின் அணையாச் சுவாலை நிறை வாழ்வின் வழி

37. திருவிவிலியம், பாரம்பரியம் ஆகிய இரண்டும் திருமறை உண்மைகளின் ஊற்று என்ற கருத்தை முன்வைத்த சங்கம்.
    1) திரிதெந்தின் பொதுச் சங்கம்
    2) கல்சிடோன் பொதுச் சங்கம்
    3) எபேசு பொதுச் சங்கம்
    4) நிசேயா பொதுச் சங்கம்
    5) 2ம் வத்திக்கான் பொதுச் சங்கம்

- A- திருத்தந்தை 13ம் – சிங்கராயர் E- அவனியில் அமைதி
  B -. 4ம் திருத்தந்தை 11ம் பத்தி நாதர் F- இளைஞரின் கிறிஸ்தவக் கல்வி
  C - திருத்தந்தை 12ம் பத்திநாதர் G- தொழிலாளர் சாசனம்
  D - திருத்தந்தை 23ம் அருளப்பர் H- கிறிஸ்துவின் மறை உடல்

38. மேற்குறித்த திருத்தந்தையர்கள் எழுதிய சுற்று மடல்கள் முறையே.
    1) E, F,G,H  2) G, E, F, H  3) G, F, H, E  4) F, E, G, H  5) H, G, E, F

39. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளில் விதித் தொகுப்புக்களில் அடங்கும் விடயங்கள்
    1) 04  2) 09  3) 03  4) 05  5) 12

40. போத்துக்கேயர் காலத்தில் கிறிஸ்தவ மறையைத் தழுவிய அரச பிள்ளைகளாக காணப்படுவர்கள்.
    1) இளவரசன் தர்மபாலா
    2) ஜயவீர பண்டார
    3) கரலியத்தே பண்டார
    4) டோனா கத்திரினா
    5) மேற்கூறிய யாவும்

41. "பத்தறோ ஆடோ" திட்டம் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களில் உள்ளடங்காதவை.
    1) பாடசாலைகளையும் விடுதிகளையும் நடாத்துதல்.
    2) அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளுக்கு மறைதூதுவர்களை அனுப்புதல்.
    3) பண உதவி வழங்குதல்.
    4) ஆலயங்களையும், துறவற மடங்கங்களையும் கட்டுதலும் அவற்றைப் பேணுதலும்.
    5) அவர்களைப் பாதுகாத்தல்.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

42. இலங்கைத் திருச்சபை வரலாற்றின் பிரதான கால கட்டங்கள்.
    1) 03 2) 05 3) 04 4) 02 5) 07

43. பிச்சைக் காரணாக மாறுவேடம் பூண்டு, கத்தோலிக்கரை தேடி வீடுகளுக்குச் சென்று தாம் ஒரு குரு என்பதை அறிமுகப்படுத்தியவர்.
    1) தூய அந்தோனியார் 2) யாக்கோமே கொன்சால்வே 3) தூய யோசவாஸ் அடிகள்
    4) தூய ஆசீர்வாதப்பர் 5) மக்சிமிலன் கோள்வே அடிகளார்.

44. "ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் செய்ய முடியாத எதையும் தன் மரணத்தருவாயில் நிறைவேற்ற முடியாது என்ற விருது வாக்காக மரணத்தருவாயில் கூறியவர்.
    1) தூய அம்புறோசியார் 2) தூய அவிலாதிரேசா 3) புனித அன்னைத் திரேசா
    4) தூய யோசவாஸ் அடிகள் 5) தூய மரியகொறட்டி

45. யேசுவின் மறைப்பணியின் போது அவரைப் பின் தொடர்ந்து அவருக்குச் சேவை செய்த பெண்கள் இருவர்
    1) எருசலேம் பெண்கள் 2) யூதப் பெண்கள்
    3) மகதலா மரியாள், வெரோணிக்கா 4) வெரோணிக்கா, இரத்தப் போக்குடைய பெண்
    5) மத்தாள், மரியாள்

46. மனிதன் மாண்புடையவனாக இருப்பதற்கான காரணமாக உள்ள சிறப்புப் பண்பாக அமைவது.
    1) இறைவார்த்தை 2) ஆடம்பரவாழ்க்கை 3) கல்வியறிவு
    4) தானதர்மம் 5) மனச்சாட்சி

47. யேசுக் கிறிஸ்துவின் "உன்னத குருத்துவ வேண்டுதல்" பற்றிக் கூறும் நற்செய்தி யாது?
    1) லூக்கா நற்செய்தி 2) மத்தேயு நற்செய்தி 3) மாற்கு நற்செய்தி
    4) யோவான் நற்செய்தி 5) திருத்தூதர் பணி

48. திருக்குடும்ப கன்னியர் சபையை ஆரம்பித்தவர்.
    1) புனித அவிலாதிரேசா 2) புனித மாக்சிமிலன் கோள்வே
    3) அருட்பணி பீற்றர் பியன்வனு நொத் 4) புனித அன்சலம்
    5) புனித ஆசீர்வாதப்பர்.

49. குளுனி துறவற சபை துறவியர் எதற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.
    1) கல்விப் பணிக்கும், பொதுப் பணிக்கும்.
    2) செபத்திற்கும், உடலை வருத்தி வேலை செய்வதற்கும்.
    3) கல்விப் பணிக்கும், மருத்துவப் பணிக்கும்.
    4) செபத்திற்கும், கல்விப் பணிக்கும்.
    5) மருத்துவப் பணிக்கும், உடலை வருத்தி வேலை செய்வதற்கும்.

50. இலங்கையில் தேசிய கிறிஸ்தவ சபைகளின் கீழ் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள கிறிஸ்தவ சபைகளின் எண்ணிக்கை யாது?
    1) எட்டு 2) ஏழு 3) இரண்டு 4) ஐந்து 5) மூன்று

(1x50 = 50 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணை பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 6th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் - II<br>Christianity - II | Three Hours<br>Gr. 13 (2022) | 43 | T | II |

**பகுதி I இல் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி - I

01) (i) பொதுத் திருமுகங்களுக்கான வேறு பெயர்கள் இரண்டினை எழுதுக. (2 புள்ளிகள்)

(ii) தொடக்க நூலின் பிரதான பகுதிகள் இரண்டினையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) மனிதன் இறைவனுக்கு எதிராகப் பாவம் செய்து தண்டனை பெற்றாலும் இறைவன் அவனைக் கைவிடுவதில்லை என்பதற்கு உதாரணம் மூன்று எழுதுக. (6 புள்ளிகள்)

(iv) ஞாயிறு தினத்தை தூய்மையாகக் கடைப்பிடிக்க நீர் செய்யக் கூடிய செயற்பாடுகள் நான்கினை தந்து விளக்குக. (8 புள்ளிகள்)

02) (i) பலஸ்தீன சமூகத்தில் ஒதுக்கப்பட்டோராகக் கருதப்பட்டோர்கள் இருவரை எழுதுக. (2 புள்ளிகள்)

(ii) யூதர்கள் வெறுத்தொதுக்கிய சமாரியரை யேசு ஏற்றுக் கொண்டு செயற்பட்டார் என்பதற்கான சான்றுகள் இரண்டு எழுதுக. (4 புள்ளிகள்)

(iii) சமநோக்கு நற்செய்திக்கும் யோவான் நற்செய்திக்கும் இடையேயுள்ள வேற்றுமைகள் மூன்றினை உதாரணங்களுடன் விபரிக்குக. (6 புள்ளிகள்)

(iv) கப்புச்சின் சபையினரின் வாழ்க்கை முறை பற்றி 4 விடயங்களை தந்து விளக்குக. (8 புள்ளிகள்)

03) (i) திவ்விய நற்கருணையை ஏற்படுத்திய சம்பவத்தைக் குறிப்பிடும் அந்தியோக்கிய பாரம்பரியத்தைப் பயன்படுத்தியவர்கள் இருவரைத் தருக. (2 புள்ளிகள்)

(ii) இரத்தத்தோடு தொடர்புடைய உணவு பானங்கள் யூதர்களுக்குத் தடை செய்யப்பட்டிருந்ததன் காரணங்கள் இரண்டு எழுதுக. (4 புள்ளிகள்)

(iii) எருசலேம் பாரம்பரியத்தின் முக்கிய அம்சங்களாக அமையும் விடயங்கள் மூன்று எழுதுக. (6 புள்ளிகள்)

(iv) இன்றைய சமுதாயத்தில் திருமுழுக்குப் பெற்று பொதுக்குருத்துவத்தில் பங்கு கொண்டுள்ள கிறிஸ்தவன் ஒருவன் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை நான்கு விடயங்களினூடாக விபரிக்குக. (8 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி - II

04) (i) ஆதிப் பெற்றோரின் பாவம் தொடர்ந்து மனுக்குலத்தைப் பாதித்தது என்பதை உதாரணங்கள் தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) தூய பவுலின் தலைமைத்துவப் பண்புகளிலிருந்து நீர் பெற்றுக்கொள்ளக் கூடிய வழிகாட்டல்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

05) (i) தூய மத்தேயு நிறைவு காலம் பற்றிய போதனையில் முன்வைத்துள்ள விடயங்கள் ஐந்தினை தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) சீனாய் உடன்படிக்கையின் மூலம் இஸ்ராயேல் மக்கள் பெற்ற அழைப்பு இன்றைய மனிதனுக்கு திருமுழுக்கின் வழியாக உரிமையாகிறது அந்த அழைப்பினூடாக நீர் சமூகத்திற்குச் செய்யக் கூடிய தூதுரைப் பணிகளைக் குறிப்பிட்டு விளக்குக. (10 புள்ளிகள்)

06) (i) பேரரசன் தியோக்கிளிசியன் காலத்தில் (கி.பி 284 – 305) கிறிஸ்தவர்கள் முகம்கொடுத்த துன்பங்களை தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) கி.பி 313ல் மிலான் சாசனம் வெளியிடப்பட்ட பின்னர் கிறிஸ்தவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் ஐந்தினைத் தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

07) (i) ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையின் கல்வி முறை பற்றி கருத்துரை தருக.

(10 புள்ளிகள்)

(ii) ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் காணப்பட்ட சிறப்பான பண்புகள் ஐந்தினை தந்து விளக்குக.

(10 புள்ளிகள்)

08) (i) திருமண வாழ்வின் தூய்மையைப் பற்றியும் கணவன் மனைவிக்கிடையே இருக்க வேண்டிய உறவு பற்றியும் தூய பவுல் (எபேசி 5 : 22 – 30) கூறும் விடயங்களைத் தந்து விபரிக்குக.

(10 புள்ளிகள்)

(ii) ஆரிய பேதகத்தில் ஆரியுஸ்ஸினால் முன்வைக்கப்பட்ட கருத்துக் ஐந்தினை தந்து விளக்குக.

(10 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk